தூத்துக்குடி புதிய பேருந்து நிலைய வளாகத்தில், தூத்துக்குடி மாநகராட்சி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் புதிதாக ரூ.1024 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள நல அடுக்கு வாகனங்கள் நிறுத்துமிடம், ரூ.900 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலைய பகுதியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கான சீர்மிகு பணிமனை, ரூ.140 இலட்சம் மதிப்பில் சிவந்தாகுளம் பகுதியில் சென்சரி பார்க், ரூ.1177 இலட்சம் மதிப்பில் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம், ரூ.207 இலட்சம் கதிர்வேல்நகர் பகுதியில் வளமீட்பு மையம், ரூ.181 இலட்சம் மதிப்பில் இளங்கோவடிகள் பூங்கா, ரூ.704 இலட்சம் மதிப்பில் சலவைக்கூடம், ரூ.372 இலட்சம் மதிப்பில் 14 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மற்றும் ஆய்வகம், ரூ.200 இலட்சம் மதிப்பில் மாநகராட்சிக்கு உட்பட்ட பழமை வாய்ந்த கட்டிடங்களை பழமை மாறாமல் புதுப்பித்தல், ரூ.212 இலட்சம் மதிப்பில் கிருபைநகர் பூங்கா, ரூ.140 இலட்சம் மதிப்பில் அம்மூவனார் பூங்கா, ரூ.180 இலட்சம் மதிப்பில் உமறுபுலவர் பூங்கா, ரூ.126 இலட்சம் மதிப்பில் ஔவையார் பூங்கா, ரூ.327 இலட்சம் மதிப்பில் ஓம் சாந்தி நகர் பூங்கா, ரூ.248 இலட்சம் மதிப்பில் செல்சீனி பூங்கா, ரூ.110 இலட்சம் மதிப்பில் ஜி.யு.போப் பூங்கா ஆகியவற்றை அமைச்சர் கே.என்.நேரு, பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன், அமைச்சர் பெருமக்கள் கீதா ஜீவன், அனிதா இராதாகிருஷ்ணன், கனிமொழி கருணாநிதி எம்.பி., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமை செயலர் ஷிவ்தாஸ் மீனா, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி.மார்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் தினேஷ்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாலாஜி சரவணன், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் பிரம்மசக்தி, மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மற்றும் திமுக கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினை

தி.மு.க. சட்ட திட்ட திருத்தக் குழு சார்பில் சிறப்பாக கொண்டாடுவோம்!

நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மே 27- தி.மு.க. சட்டதிட்ட திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நேற்று (26.5.2023 வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணி அளவில், செயலாளர் ஆர்.கிரிராஜன், எம்.பி., தலைமையில், இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் மற்றும் மாநில நிர்வாகிகளான ஓரத்தநாடு இராசமாணிக்கம், தென்றல் செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம் வருமாறு:

தி.மு.க. சட்டதிட்ட திருத்தக்குழு சார்பில் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினை எழுச்சியுடன் கொண்டாடிட வேண்டும்.

தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஓய்வில்லாச் சூரியனும் தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டுகால பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரும் ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டு காலப் பங்களிப்பாளரும் அரை நூற்றாண்டு காலம் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவரும் களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளரும் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவரும் இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவரும் இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளரும் - தான் ஆட்சிக் கட்டிலில் முதலமைச்சராக அமர்ந்த போதெல்லாம் தமிழ்நாட்டு விவசாயிகளின் நலனை முன்னிருத்தி, அவ்விவசாயிகளுக்காக இலவச மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை வகுத்து, விவசாயிகளின் பாதுகாவலனாக இருந்தவரும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்தவருமான நம் 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் நூற்றாண்டு 2023 சூன் 3ஆம் நாள் தொடங்கவுள்ளதையொட்டி; நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் எங்கெங்கும் நடத்திட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை எழுச்சியுடன் கொண்டிட, இந்த தி.மு.க. சட்டதிட்டத் திருக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் தீர்மானிக்கிறது.

"திராவிட மாடல்" ஆட்சியின் இரண்டாம் ஆண்டு சாதனைகளுக்குப் பாராட்டு!

கொரோனா பேரிடர் காலத்தில் பொறுப்பேற்று, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் தமிழர் நலன் மற்றும் தமிழ் நாடு மேம்பாடு இவற்றை மட்டுமே குறிக்கோளாக கொண்டு, கண் துஞ்சாது, மெய் வருத்தம் பாராது, தமிழ்நாட்டு நலனுக்காக அல்லும் பகலும் பாடுபட்டு, பார் போற்றும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி, "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" எனும் பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழியை தன்மொழியாக்கி, திட்டங்களை செயல்படுத்தி, ஓய்வறியா சூரியனாய் உழைத்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான 'திராவிட மாடல்' ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனைகளை இக்கூட்டம் பாராட்டி மகிழ்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஜெ.சிவபாதம் தலைமை! எஸ்.டி.கருணாநிதி வரவேற்புரை!

திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

டி.ஆர்.பாலு எம்.பி - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - வே.உமாகாந்த் சிறப்புரை!

காஞ்சிபுரம், மே. 27 - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருபெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நாடாளுமன்ற தேர்தலையொட்டி செயல்வீரர்கள் கூட்டம் இன்று (27.5.2023 - சனிக்கிழமை) பிற்பகல் 2 மணிக்கு, சோகண்டி, கலைஞர் திடலில் நடைபெறுகிறது.

ஒன்றிய அவைத் தலைவர் ஜெ.சிவபாதம் தலைமை வகிக்கிறார்.

ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றியக்குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி, கிளைச் செயலாளர்கள் இ.சகாதேவன், ஆர்.செந்தில்குமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

பி.ரவி, இரா.பிரகாசம், நா.சத்யா, பி.மோகன், தி.பிரபாகரன், சி.நளினா சின்ன கண்ணு, மா.மணிவண்ணன், ச.வேலுமணி, ஏ.நாசர் முஹம்மது, இ.முனிகிருஷ்ணன், ப.இராமமூர்த்தி, எஸ்.கே.பாலா (எ) பால்ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன், தொகுதி பார்வையாளர் வே.உமாகாந்த் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக, ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், பி.எல்.ஏ.2 முகவர்கள், வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், தேர்தல் பணிக்கான உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

நெசவாளர் அணி சார்பில் - ஆண்டு முழுவதும் நல உதவிகள் - சாதனை விளக்கக் கூட்டங்கள்!

மாநில நெசவாளர் அணிக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மே 27- தி.மு.க. நெசவாளர் அணியின் மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 24.05.2023 அன்று சேலம் கலைஞர் மாளிகையில் அணியின் தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமையில் - துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம் வரவேற்புரையாற்ற, செயலாளர்கள் எஸ்.எல்.டி.பி.சச்சிதானந்தம், பொள்ளாச்சி கே.எம்.நாகராசன், சிந்துரவிசந்தி ரன் மற்றும் துணை செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி.ஜி.வி. மணிமாறன், திருச்சி எம்.கோவிந்த சாமி, தேனி ஆ.ராமசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. சேலம் மத்திய மாவட்ட செயலாளர் ஆர்.ராஜேந்திரன் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தந்தை பெரியாரின் குருகுலத்தில் பயின்று அறிஞர் அண்ணாவின் பாசறையில் வளர்ந்த திராவிட இயக்கத்தின் ஈடு இணையற்ற தலைவராக விளங்கிய தமிழ்த்தாயின் தலைமகன், எழுத்தாற்றல் பேச்சாற்றல், நிர்வாகத் திறமை ஆகியவற்றில் ஆளுமையோடு, தன்மான உணர்வுக்கும் சுயமரியாதைச் சிந்தனைக்கும் வழிவகுத்து, நம் ரத்தத்தோடும் ரத்த நாளங்களோடும் இரண்டறக் கலந்துள்ள தமிழகத்தின் ஒப்பற்றத் தலைவர் தன்னுடைய 80 ஆண்டு கால பொது வாழ்க்கையில் 50 ஆண்டு காலம் கழகத் தலைவராகவும், 13முறை சட்டமன்ற தேர்தலில் களம் கண்டு வெற்றி வாகை சூடி சாதனை படைத்தவரும், 5முறை தமிழ்நாடு முதல் அமைச்சராக பொறுப்பேற்று மாநிலத்தில் அனைத்து மக்களும் பயன் பெறும் வகையில் திட்டங்களைத் தீட்டி, தன் ஆட்சிக்காலத்தில் அதனை நடைமுறைப்படுத்திய இந்திய ஜனநாயக காவலராகத் திகழ்ந்த மூத்ததலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா ஆண்டில் அவரது பிறந்த நாள் ஜூன் 3 அன்று முதல் நெசவாளர் அணியின் சார்பில் ஆண்டு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கியும் சிறப்பாக கொண்டாடுவது என இக்கூட்டம் ஏக மனதாகத் தீர்மானிக்கிறது.

தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட்டிலிருந்து 300 யூனிட் வரையிலும் விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட்டிலிருந்து 1000 யூனிட் வரையிலும் விலையில்லா மின்சாரம் வழங்கி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திய கழகத்தலைவர், தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்களுக்கு நெசவாளர் அணி மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

நலிந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு வங்கிகளில் பெற்றிருந்த காசுக்கடனை நபார்டு வங்கி உதவியுடன் செலுத்தி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து செயல்பட உதவியது போல் நலிவடைந்துள்ள விசைத்தறி நெசவாளர் மற்றும் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள காசுக்கடனை நபார்டு வங்கி உதவியுடன் செலுத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தொடர்ந்து செயல்படவும், நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கவும் தக்க ஆவன செய்து உதவிடுமாறு முதல் அமைச்சர் அவர்களை இக்கூட்டம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேலம் நீதிமன்றத்தில்

எடப்பாடி பழனிசாமி மீதான வழக்கில் விசாரணை அறிக்கை தாக்கல்!

வேட்பு மனுவில் தவறான சொத்து விவரங்கள்!

சேலம், மே 27- கடந்த சட்டமன்ற தேர்தலின்போது, சொத்து விவரங்களை மறைத்ததாக எடப்பாடி பழனிச்சாமி மீது தொடரப்பட்ட வழக்கின் விசாரணை அறிக்கையை மத்திய குற்றப்பிரிவு காவல் துறையினர் சேலம் நீதிமன்றத்தில் நேற்று தாக்கல் செய்தனர்.

கடந்த 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது, வேட்பு மனுவில் சொத்து விபரம் குறித்து தவறான தகவல்களை அளித்துள்ளதாக எடப்பாடி பழனிச்சாமி மீது தேனி மாவட்டத்தைச் சேர்ந்த மிலானி என்பவர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், இது குறித்து உரிய விசாரணை நடத்தி, விசாரணை அறிக்கையை மே 26ம் தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு சேலம் மத்திய குற்றப்பிரிவு காவல்துறைக்கு உத்தரவிட்டது. எடப்பாடி பழனிச்சாமி மீது மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து மத்திய குற்றப்பிரிவு காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டனர்.

இதனையடுத்து விசாரணை அறிக்கையை மத்திய குற்றப்பிரிவு காவல்துறையினர் சேலம் நீதிமன்றத்தில் நேற்று தாக்கல் செய்தனர். அதில், கடந்த 2021 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிடும் பொழுது பழனிசாமி கொடுத்த சொத்து விவரங்கள் தவறானதாக உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

தாம்பரம் மாநகர தி.மு.க. இளைஞரணி - மாணவரணி சார்பில்

கலைஞர் நூற்றாண்டு விழா - கலைஞர் கோப்பை கிரிக்கெட் போட்டி!

தலைமை: எஸ்.ராஜேஷ்! வீ.கார்த்திக் முன்னிலை!

சென்னை, மே.27- தாம்பரம் மாநகர தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கலைஞர் கோப்பை கிரிக்கெட் போட்டி மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.ராஜேஷ் தலைமையில் இளைஞரணி அமைப்பாளர் வீ.கார்த்திக் முன்னிலையில் இன்றும் (27.5.2023)- நாளையும் (27.5.2023) தாம்பரம், டி.டி.கே.நகர் கலைஞர் திடலில் நடைபெறுகிறது.

இளைஞரணி - மாணவரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.பாஸ்கர் எம்.வினோத் வி.சிவ சுப்ரமணியம் கே.எம்.தாஸ் எம்.தினேஷ் (எ) குட்டி பா.அன்பழகன் ஏ.மணிகண்டன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

போட்டியை மண்டல குழு தலைவர்களும் பகுதி செயலாளருமான டி.காமராஜ் மற்றும் எஸ்.இந்திரன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா பரிசுகளை வழங்கி சிறப்பிக்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாநகர, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி மாணவர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

மாணவரணி அமைப்பாளர் எஸ்.கார்த்திக் நன்றி கூறுகிறார்.

பள்ளிக் கல்வித்துறை சார்பில் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட

பணிகள் மேம்படுத்துவது குறித்து பெருங்குடி மண்டலத்தில் ஆய்வு!

மேயர் ஆர்.பிரியா நேரில் மேற்கொண்டார்!

சென்னை, மே.27- பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட பள்ளிகளை மேம்படுத்துவது தொடர்பாக மேயர் திருமதி ஆர்.பிரியா பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகளில் நேற்று (26.05.2023) ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் உள்ள 790 பள்ளிகளில் திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்கள் மற்றும் சென்னை மாவட்டத்தில் ஒரு பள்ளி உட்பட 139 பள்ளிகள் பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகத்திடம் பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் ஒப்படைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மேயர் திருமதி ஆர்.பிரியா வார்டு 181க்குட்பட்ட கொட்டிவாக்கம், குப்பம் சாலையில் உள்ள செயின்ட் தாமஸ் மவுண்ட் பஞ்சாயத்து வாரிய பள்ளியில் உள்ள பழைய பள்ளிக் கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுவது தொடர்பாக நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, வார்டு 186க்குட்பட்ட பெருங்குடி, பள்ளி சாலையில் உள்ள பஞ்சாயத்து தொடக்கப் பள்ளியில் கூடுதலாக வகுப்பறைகள் கட்டுவது தொடர்பாகவும், வார்டு189க்குட்பட்ட நாராயணபுரம், தாம்பரம் வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள பஞ்சாயத்து தொடக்கப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள் மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்வது தொடர்பாகவும், வார்டு191க்குட்பட்ட ஜல்லடியான்பேட்டை, வீராத்தம்மன் கோயில் தெருவில் உள்ள பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கழிப்பறை கட்டுதல் மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் தொடர்பாகவும், வார்டு 188க்குட்பட்ட பள்ளிக்கரணை, மயிலை பாலாஜி நகர் பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சுற்றுச்சுவர் அமைத்தல், சமையலறை கட்டுதல், கழிப்பிடம் மற்றும் இதர புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் தொடர்பாகவும் மேயர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

123வது வட்ட தி.மு.க. பாக முகவர்கள் கூட்டம்!

மு.இ.ஏழுமலை தலைமை! நந்தனம் கி.மதி எம்.சி. முன்னிலை!

சென்னை, மே 27- சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி பி.எல்.ஏ.2 கூட்டத்தை தொடர்ந்து, மயிலை மேற்கு பகுதி, 123வது வட்ட தி.மு.க. பி.எல்.ஏ.2 / பி.எல்.சி. கூட்டம் இன்று (27.05.2023) சனிக்கிழமை மாலை 6.30 மணி அளவில் மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு அலுவலகத்தில் (எம்.எல்.ஏ. அலுவலகம்) நடைபெற இருக்கிறது. மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி. மதி எம்.சி. முன்னிலையில் மு.இ.ஏழுமலை தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர் வட்ட கழகத்திற்கு உட்பட்ட 25 பாக பி.எல்.ஏ.2 மற்றும் பி.எல்.சி. உறுப்பினர் அனைவரிடமும் கலந்துரையாடல் செய்ய இருக்கிறார்.

பொருள்: புதிய உறுப்பினர்கள் சேர்க்கை விரிவாக்கம், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா குறித்து, கழக ஆக்க பணிகள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

குன்றத்தூர் தா.மோகலிங்கம்
மே 27 (2012)

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் கழகம் வளர அரும்பாடுபட்டவர். குன்றத்தூர் பேரூர்க் கழகச் செயலாளராக தொடர்ந்து முப்பது ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர்.

1986ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாக ஐந்து ஆண்டுகள் மக்கள் பணியாற்றினார்.

திருப்பெரும்புதூர் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவராக பத்து ஆண்டுகள் பணியாற்றியவர். தமிழ்நாடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க இயக்குநராகவும் இருந்துள்ளார்.

அவர்மீது கொலைமுயற்சி வழக்கு உள்ளிட்ட பல பொய் வழக்குகள் தொடரப்பட்டு அ.தி.மு.க. ஆட்சியில் பலமுறை சிறை சென்றுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோவை மணியன்
மே 27 (2009)

கழகத்தின் முன்னோடிப்பேச்சாளர்களில் ஒருவர். எளிமையானவர். பள்ளியில் படிக்கும்போதே பேச்சுப் போட்டிகளில் பலமுறை கலந்து கொண்டு சொல்லில் வல்லவனாகத் திகழ்ந்து பரிசுகள் பல பெற்றவர்.

கழக சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக பணியாற்றியவர்.

மிசா காலத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர். கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று ஐந்து முறை சிறை சென்றவர்.

தாம் பங்கேற்ற பொதுக்கூட்டங்களைப் பற்றியும் அதனால் விளையும் பயன்களைப் பற்றியும் மாதந்தோறும் தவறாமல் தலைமைக் கழகத்திற்குப் பட்டியல் அனுப்புவதை தன் கடமையாகக் கொண்டிருந்தார்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒருமுறை உடன்பிறப்புக்குத் தீட்டிய மடலில் இவரது பிரச்சாரப் பணியைப் பாராட்டியுள்ளார்.

இவருக்கு, தலைமைக் கழகம் சார்பில் 1998ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் 'கலைஞர் விருது' வழங்கிசிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.